**செய்தி குறிப்பு எண்.95** **நாள்.4.7.2007**

# குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் குறித்த அனைத்து மாநில அமைச்சர்கள் கருத்தரங்கம்

**இடம் : புதுதில்லி – விக்ஞான் பவன்**

**நாள் : 04.07.2007**

**மாண்புமிகு தமிழ்நாடு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் உரை – தமிழாக்கம்**

மாண்புமிகு மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ரகுவன்ஸ் பிரசாத் சிங் அவர்களே,

குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார துறைக்கு தலைமை ஏற்றுள்ள மாநில அமைச்சர் பெருமக்களே

இந்திய அரசின் குடிநீர் வழங்கல் துறையின் அரசு செயலர் அவர்களே,

இந்திய அரசு மற்றும் பல்வேறு மாநிலங்களிலிருந்து இக்கருத்தரங்கிற்கு வருகை தந்து பங்கேற்றுள்ள அரசு செயலாளர்களே, அதிகாரிகளே,

சகோதர சகோதரிகளே,

மிகுந்த சிறப்பு வாய்ந்த பிரதிநிதிகள் கூடியுள்ள இந்த கருத்தரங்கில் பங்கேற்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்துள்ளது. பெரும் முக்கியத்துவம் வாய்ந்த குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் ஆகிய பொருள் பற்றி எங்களுடைய கருத்துக்களை இந்த கருத்தரங்கில் பகிர்ந்து கொள்வதற்கு ஏற்பாடு செய்துள்ள இந்திய அரசிற்கு நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த கருத்தரங்கத்தில் "நாட்டிலுள்ள ஊரக பகுதிகளில் அனைவருக்கும் 2012 ஆண்டிற்குள் நீடித்த குடிநீர் வழங்கல் திட்டங்கள் மற்றும் சுகாதார வசதியை அளித்தல்" என்பதை மையப் பொருளாக தேர்வு செய்தமைக்கு மத்திய அரசிற்கு எனது பாராட்டுகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஐக்கிய முற்போக்கு கூட்டணியின் அரசாக செயல்படும் மத்திய அரசு பொதுமக்களின் நலனில் மிகுந்த கவனம் கொண்டுள்ளது. இதற்கேற்ப ஊரக பகுதிகளில் வாழும் அனைவருக்கும் சுகாதார வசதிகளையும் குடிநீர் விநியோகத்தையும் வழங்குவதையும் நோக்கமாக கொண்ட சிறந்த திட்டமான "பாரத் நிர்மான்" என்ற திட்டத்தை துவக்கி உள்ளது.

அனைவருக்கும் குடிநீர் கிடைத்திட செய்ய வேண்டும் என்பது பாரத் நிர்மான் திட்டத்தின் முக்கிய நோக்கமாக உள்ளதால், திட்டங்களின் நீடித்த தன்மை குறித்து நிலவுகின்ற பிரச்சினைகளை பற்றி நாம் தாமதமின்றி உடனடியாக கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் 1967 ஆம் ஆண்டு திராவிட முன்னேற்ற கழக அரசு தமிழ்நாட்டில் ஆட்சி பொறுப்பேற்றது முதல் அனைத்து தரப்பினரின் நலன்களையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்ற தத்துவமானது தமிழக வரலாற்றில் இடம் பெற்றுள்ளது.

அறிஞர் அண்ணா அவர்களின் அடிச்சுவட்டை தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள தமிழ்நாட்டின் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள், தமிழக அரசின் அனைத்து திட்டங்களையும், சமூக நீதி என்ற மையக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கி உள்ளார்.

குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரத்தின் முக்கியத்துவம் என்பது அனைவரும் உணர்ந்த ஒன்றே ஆகும் . புகழ்வாய்ந்த தமிழ் பெரும்புலவர் திருவள்ளுவர் அவர்கள்

**"நீர் இன்று அமையாது உலகு"**

என்று கூறியுள்ளார்.

**‘‘நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்’’**

என்பது சுகாதாரமான வாழ்க்கையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் தமிழ் பழமொழியாகும்.

ஊரக குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதாரம் குறித்து திட்டங்களை நிறைவேற்றுவதில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. குடிநீர் வழங்கலுக்கான திட்டங்களை வகுத்து செயல்படுத்திட இந்தியாவிலேயே முதன் முறையாக தமிழ்நாட்டில் 1971 ஆம்ஆண்டே தமிழ்நாடு குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் வாரியம் என்ற சட்டபூர்வமான அமைப்பு ஏற்படுத்தப்பட்டது.

கடந்த 30 ஆண்டுகளில் ஊரக குடிநீர் வழங்கல் திட்டங்களுக்காக தமிழ்நாடு அரசு முதலீடு செய்துள்ள நிதியின் அளவினை வைத்தே இதற்கு மாநில அரசு வழங்கியுள்ள முக்கியத்துவத்தை உணரலாம். ஊரக பகுதிகளில் குடிநீர் வழங்குவதற்காக மொத்தம் ரூபாய் 4583 கோடி இக்காலக்கட்டத்தில் முதலீடு செய்யப்பட்டது.

கடந்த மே மாதம் 2006ல், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களின் தலைமையில் ஆட்சி அமைந்த பிறகு தமிழ்நாட்டில் 9 இலட்சத்து 34 ஆயிரம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி மக்களை உள்ளடக்கிய மொத்தம் 30 இலட்சம் நபர்கள் பயன் அடையும் வகையில் 7ஆயிரத்து 742 குடியிருப்புகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட்டுள்ளது. நடப்பு நிதியாண்டில் மட்டும், மத்திய மாநில அரசுகளின் நிதியுதவியுடன் மேலும் 9 ஆயிரம் குடியிருப்புகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கு இந்திய அரசு 191 கோடி ரூபாயும், தமிழ்நாடு அரசு 411 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்துள்ளன. ஊரக பகுதிகளுக்கு போதுமான அளவு குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்திட பெருமளவிலான முதலீடு

தேவைப்படுகின்ற அதே நேரத்தில் செயல்படுத்தப்படுகின்ற திட்டங்களின் நீடித்த தன்மையையும் உறுதி படுத்த வேண்டியுள்ளது.

குடிநீர் வழங்கல் திட்டங்களை பொறுத்தவரை நீராதாரம் மற்றும் விநியோக அமைப்புகள் ஆகிய இரண்டு அம்சங்களின் நீடித்த தன்மை என்பது மிக முக்கியமானதாகும். இத்தகைய நிலைத்த தன்மையை உறுதி படுத்துவதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் வழிகாட்டுதலின்படி 1977 ஆம் ஆண்டு முதல் நீர் ஆதாரங்களை பாதுகாக்க என நீர் சேகரிப்பு அமைப்புகளை உருவாக்கும் ஒரு தனித் திட்டத்தை துவக்கியது.

இதுவரை இத்தகைய 3 ஆயிரத்து 186 நீர் சேகரிப்பு அமைப்புகள் மொத்தம் ரூபாய் 109 கோடி செலவில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மழை நீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துவதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக விளங்குகிறது என்பதை இங்கே சிறப்பாக குறிப்பிட வேண்டும். கட்டிட வரைப்பட அனுமதி பெறுவதற்கு மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை கட்டிடத்தில் ஏற்படுத்த வேண்டும் என்பது சட்டப்பூர்வமான விதிமுறையாக்கப்பட்டுள்ளது.

இத்தகைய நடவடிக்கைகளின் காரணமாக நகர்புற பகுதிகளில் உள்ள 1 இலட்சத்து 72 ஆயிரம் அரசு கட்டிடங்களிலும், 48 இலட்சத்து 11 ஆயிரம் தனியார் கட்டிடங்களிலும் மற்றும் ஊரக பகுதிகளில் உள்ள 66 இலட்சத்து 67 ஆயிரம் கட்டிடங்களிலும் மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

குடிநீர் ஆதாரங்களின் தன்மை பாதிக்கப்பட்டுள்ள குடியிருப்புகளில் பாதுகாக்கப்பட்ட சுத்தமான குடிநீரை வழங்குவதற்கான நடவடிக்கைகளுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி 5 ஆயிரத்து 574 குடியிருப்புகளில் நீரினுடைய தரத்தில் குறைபாடு உள்ளதாக தெரிய வந்தது. இவற்றில் இதுவரை 5 ஆயிரத்து 431 குடியிருப்புகளுக்கு

பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான நடவடிக்கைகள் முடிவடைந்து தற்போது குடிநீர் வழங்கப்படுகிறது. எஞ்சியுள்ள குடியிருப்புகளுக்கும் நடப்பு ஆண்டிலேயே பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்படும்.

தரமான குடிநீர் கிடைக்காமல் மற்றும் போதுமான நீராதாரம் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ள இராமநாதபுரம் மாவட்டத்திற்கு குடிநீர் வழங்குவதற்கான மிகப் பெரிய கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கான ஆயத்த பணிகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் துவக்கி வைத்துள்ளார் என்பதை இந்நேரத்தில் தெரிவிப்பது மிக பொறுத்தமானது என கருதுகிறேன்.

இந்த திட்டத்தின் மூலம் 5 நகராட்சிகள் 11 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 3163 ஊரக குடியிருப்புகளில் உள்ள 15 இலட்சத்து 64 ஆயிரம் நபர்களுக்கு பாதுகாக்கப்பட்ட தரமான குடிநீர் வழங்கப்படும். இத்திட்டத்திற்கு மொத்தம் 616 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதே நேரத்தில் ஊரக பகுதிகளில் சுத்தமான குடிநீர் வழங்குகின்ற நீராதாரமாக உள்ள ஊரணிகள் எனப்படுகின்ற குளங்களின் நீடித்த நீர் வளத்தினை உறுதி செய்யும் வகையில் ஒரு ஒருங்கிணைந்த திட்டதை செயல்படுத்த கருதியுள்ளோம்.

குடிநீர் ஆதாரங்களின் நீடித்த திறன் மற்றும் வழங்கப்படும் குடிநீரின் தரம் ஆகியவற்றை கண்காணித்திட 1286 பரிசோதனை கிணறுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 28 மாவட்டங்கள் மற்றும் மாநில தலைமை இடத்திலுள்ள பரிசோதனை கூடங்களின் மூலம் குடிநீரின் தரம் அவ்வப்போது உரிய கால இடைவெளியில் ஆய்வு செய்யப்படுகிறது.

இந்திய நாட்டிலுள்ள குடிநீர் ஆய்வகங்களிலேயே தமிழ்நாடு குடிநீர்வழங்கல் மற்றும் வடிகால் வாரிய தலைமை அலுவலகத்தில் உள்ள ஆய்வகமே ISO சான்றிதழ் பெற்ற முதல் ஆய்வகம் ஆகும் என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமல்ல கள அளவில் குடிநீரின் தரத்தினை ஆய்வு செய்யக் கூடிய ஒரு கையடக்க ஆய்வு உபகரணத்தை குடிநீர் வாரியம் உருவாக்கியுள்ளது. இது உபயோகிப்பதற்கு எளிமையானது ஆகும். இதனை அனைத்து கிராம ஊராட்சிகளுக்கும் வழங்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

முழு சுகாதார இயக்கத்தின் செயலாக்கத்தில் பொன்விழா சுய வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களை ஈடுபடுத்தியுள்ளது தமிழ்நாட்டில் இத்திட்டத்தை சிறப்பான முறையில் செயல்படுத்த உதவியுள்ளது.

தமிழ்நாட்டில் முழு சுகாதார இயக்கம் திட்டமானது 1999–2000மாவது ஆண்டில் 4 மாவட்டங்களில் துவக்கப்பட்டது. அப்போது ஊரக சுகாதாரத்தை பொறுத்தவரை 15 சதவீத பகுதிகளே இத்தகைய வசதியை பெற்றிருந்தன. தமிழக அரசு மேற்கொண்ட சிறப்பான முயற்சிகளின் விளைவாக தற்போது ஊரக பகுதிகளில் உள்ள 68 சதவீத தனி நபர் இல்லங்கள் கழிப்பறை வசதியை பெற்றுள்ளன.

2007 ஆம் ஆண்டிற்குள் 100 சதவீத பள்ளி கூடங்கள் மற்றும் அங்கன்வாடிகளுக்கும் சுகாதார வசதிகள் ஏற்படுத்தி அளிக்கப்படும்.

நடப்பு ஆண்டில் மட்டும் 296 கிராம ஊராட்சிகள் மத்திய அரசு வழங்குகின்ற "நிர்மல் கிராம புரஸ்கார்" என்ற தூய்மையான கிராம விருதினை மேதகு இந்திய குடியரசு தலைவர் அவர்களிடமிருந்து பெற்றுள்ளன. இது

ஊராட்சி அமைப்புகள் முழு சுகாதார இயக்கத்தின் செயலாக்கத்தில் கொண்டுள்ள கூடுதலான ஈடுபாட்டினை காட்டுகின்றது.

இறுதியாக மத்திய அரசின் சாதகமான ஆய்விற்கு என கீழ்கண்ட பரிந்துரைகளை நான் சமர்ப்பிக்கிறேன்.

- குடிநீர் ஆதாரங்களின் நீடித்த தன்மையை உறுதி செய்ய மத்திய அரசு 100 சதவீத நிதியுதவியுடன் கூடிய ஒரு புதிய திட்டத்தை துவக்க வேண்டும். தேசிய ஊரக வேலை உறுதி திட்ட நிதியில் குறைந்தபட்சம் 30 சதவீதம் நீர் சேகரிப்பு பணிகளுக்கு ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

- பெரிய அளவிலான நீர் சேகரிப்பு அமைப்புகளை ஏற்படுத்துவதற்கு ஏதுவான நிலப் பகுதிகளை கண்டறிவதற்கு தொலை உணர்வு மற்றும் நிலவியல் தகவல் முறை ஆகிய தொழில்நுட்பங்களை பயன்படுத்த வேண்டியுள்ளது. தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ள இத்தகைய திட்டங்களுக்கு மத்திய அரசின் முழு நிதி உதவியை வழங்க வேண்டும் என கோருகிறேன்.

- ஏற்கனவே முழு அளவு குடிநீர் தேவை பூர்த்தி செய்யப்பட்ட குடியிருப்புகளிலும் தவிர்க்க இயலாத பல்வேறு காரணங்களால் குடிநீர் பற்றாக்குறை ஏற்படுவதால் விரைவு படுத்தப்பட்ட ஊரக குடிநீர் வழங்கல் திட்டத்தின் கீழானஒதுக்கீட்டை இத்தகைய குடியிருப்புகளுக்கும் நிதியுதவி அளித்திட ஏற்ற வகையில் அதிகரிக்க வேண்டும்.

- மேலும் தனியர் நபர் இல்ல கழிப்பறைகளுக்கு தற்போது வழங்கப்படுகின்ற மானியமான ரூபாய் 1200 என்பதை குறைந்தபட்சம் 5000 ரூபாயாக மத்திய அரசு உயர்த்தி அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அப்போதுதான் நிலையான தனிநபர் இல்ல கழிப்பறைகளை ஏற்படுத்த இயலும்.

நிறைவாக தமிழ்நாட்டின் சார்பாக இந்த கருத்தரங்கில் கலந்து கொண்டு எமது மாநிலத்தின் கருத்துக்களை தெரிவிக்க வாய்ப்பளித்தற்கு இந்திய அரசிற்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்திய அரசின் உதவி மற்றும் ஆதரவுடன் பாரத் நிர்மான் திட்டத்தின் அனைத்து இலக்குகளையும் உரிய கால கெடுவிற்குள் தமிழ்நாடு அரசு நிறைவேற்றும் என்ற உறுதியையும் அளிக்கிறேன்.

வணக்கம்.

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை9.